பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 16] சென்னை: கார்த்திகை 19 (4—12—68) புதன் ★ வெளியூர்: கார்த்திகை 20 (5—12—68) வியாழன் [இதழ்: 141

## தமிழ் வளர்ச்சி -- ஆராய்ச்சி மன்றம்

### தமிழக அரசு அமைக்கிறது

தமிழ்நாட்டு அரசு 30 பேர் கொண்ட தமிழ் வளர்ச்சி -- ஆராய்ச்சி மன்றத்தை அமைத்துள்ளது.

கல்வி அமைச்சர் நெடுஞ்செழியன் இதற்குத் தலைவராவார். பொதுப்பணி அமைச்சர் கருணாநிதி துணைத் தலைவராவார்.

உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி எம். அனந்தநாராயணன், பேராசிரியர் அன்பழகன் ஆகியோர் உறுப்பினர்களாவர்.

# மனம் நொந்த நிலையில் பர்மா அகதிகள்!

## இந்திய அரசுமீது வைத்த நம்பிக்கை தளர்கிறது

## டெல்லி அமைச்சர் முன்னிலையில் அண்ணா நிலைமை விளக்கம்

### உரிய நடவடிக்கை எடுத்து சொத்துக்களை மீட்டுத்தர வற்புறுத்தல்

சென்னை, டிச. 4—

"பர்மாவிலிருந்து குடிபெயர்ந்து வந்தோரது மறுவாழ்வுக்கென்று நாங்கள் எடுத்த பல்வேறு நடவடிக்கைகளை விவரித்துக்கொண்டுபோக எங்களால் முடியுமென்றாலும் பர்மாவிலிருந்து வந்தோரிடம் திருப்தி இருக்கக் காணோம்; அவர்களில் பலர் நடைபாதை ஓரக் கடைக்காரர்களாக இருக்கிறார்கள்.

"அவர்கள் வியாபாரம் செய்யத் தேவையான கடனை வழங்கியிருக்கிறோம்; அவர்களது வியாபாரம் ஆபத்து நிறைந்ததாக -- சரிந்துவிடுமோ என்ற அச்சம் நிறைந்ததாக இருப்பதால், அவர்களிடமிருந்து கடன் பாக்கியைத் திருப்பி வசூலிப்பது சுலபமாக இல்லை; இதுபற்றி இந்திய அரசுக்கு எழுதினோம். 'எவ்வெப்பொழுது எவ்வளவு தொகை வசூலிக்க இயலுமோ அவ்வளவுக்கு வசூலித்துச் செலுத்திவாருங்கள் -- போதும்' என்று மத்திய அரசினர் எழுதியிருக்கின்றனர்; இது, இதமானதோர் தீர்வாகும்.

"பர்மாவிலிருந்து வந்தவர்கள் நம்பிக்கை நிறைந்த மனத்தோடு வந்தார்கள்; தாங்கள் பர்மாவில் விட்டுவந்த சொத்துக்களை மீட்டுத்தர இந்திய அரசினர் நடவடிக்கை எடுப்பார்கள் என்பது அவர்களது நம்பிக்கை; அந்த நம்பிக்கை இப்போது தளர்ந்து, மனம் நொந்தவர்களாக அவர்கள் இருக்கிறார்கள்; அவர்கள் நிலைமை சீரடைய இந்தியா, பர்மிய அரசோடு பேச வேண்டும்; இந்த நடவடிக்கை எடுக்கப்பட மனுபாய் ஷா தம் செல்வாக்கைப் பயன்படுத்த வேண்டும்; பர்மியப் பொருளாதாரமும் பாதிக்கப்படாமல், 'தவணைக்கு இத்தனைக் கோடி' என்ற அளவிலாவது காலப்போக்கில் சொத்துக்கள் நம்மவர்க்குத் திரும்பக் கிடைத்திட வகை செய்யப்பட வேண்டும்."

இவ்வாறு முதலமைச்சர் அண்ணா அவர்கள், இராஜாஜி மண்டபத்தில், அகதிகள் மறுவாழ்வுத் துறையின் ஐந்தாவது கூட்டத்தைத் துவக்கிவைத்துப் பேசுகையில் சுட்டிக்காட்டிக் கேட்டுக்கொண்டார். மேலும் அவர் குறிப்பிட்டதாவது :—

"ஏற்கனவே நாம்கூடி சில அடிப்படை முடிவுகளையும், செயல் வழிமுறைகளையும் வகுத்துக்கொண்டிருக்கிறோம்.

இச்குழுவின் தலைவர் என்கிற முறையில் மனுபாய் ஷா, குழுவின் முடிவுகளை அமுல்படுத்தி, இலங்கை -- பர்மாவிலிருந்து வெளியேறி வருகின்றவர்களுக்கு மறுவாழ்வு ஏற்படவும், அதன் மூலம் நம் நாட்டுப் பொருளாதாரம் வலிவடைந்திடவும் ஆவன செய்வாரென நம்புகிறேன்.

இங்கு வருகின்றவர்கள் ஓரளவு தொழில் நுணுக்க அறிவுடன் வருகிறார்கள்; அவர்களுக்கு நாம் உதவுவதென்பது நமக்கு நாமே உதவிக் கொள்வதாகும்.

தோட்டத் தொழிலில் நல்ல பயிற்சியுடையோர் இலங்கைத் தீவிலிருந்து வருகிறார்கள். அவர்களுக்கு உதவும் நோக்குடன் தேயிலை, காபித் தோட்டங்களை அமைத்திட இங்குள்ள தொழிலதிபர்கள் முன்வந்துள்ளனர்; இதற்குக் கடன் கேட்டு அவர்கள் வரும்போது இந்திய அரசினர் சற்றுத் தாராளத்துடன் நடந்துகொள்ள வேண்டும்.

தோட்டக் காடுகளை ஏற்படுத்துவதில், பெரிய அளவில் இயங்கத் தேவையான மலைப் பகுதிகள் இங்கு இல்லையென்றாலும், ஆங்காங்கு தமிழ்நாட்டில் விவசாயக் குடியேற்றங்களை அமைக்க எங்களால் இயலும்.

'பத்தாயிரம் ஏக்கர்' என்று பிரும்மாண்டமான அளவில் அவை அமையாவிடினும் சிறிய அளவிலேனும் பல விவசாயக் குடியேற்றங்களை எங்களால் அமைக்க இயலும்; இலாபகரமானவையாக அவற்றை இயக்க முடியும்.

பல மாவட்டங்களில் அதிகாரிகளும், சில பெரிய குடியானவர்களும் மணலால் மூடப்பட்டுக் கிடந்த நிலப்பரப்பைத் திருத்தி சாகுபடிக்கு ஏற்றதாக ஏற்கனவே மாற்றியிருக்கிறார்கள்.

தமிழக அரசின் அதிகாரிகள் விவசாயக் குடியேற்றங்களை அமைப்பது பற்றிய விரிவான திட்டத்தைத் தயாரித்து வைத்திருக்கிறார்கள்.

எதையும் தீர்க்கமாகச் செய்ய வேண்டுமென்ற உணர்வும், பெருமித உணர்வும் உடையவர் மனுபாய் ஷா; நாம் வகுத்திருக்கின்ற மறுவாழ்வளிப்புத் திட்டங்களைச் செயல்வடிவில் நிறைவேற்றிட இந்திய அரசினருடன் வாதிட்டுத் தேவையானதைப் பெறுவார் என்று நான் நம்புகிறேன்.

இலங்கையிலிருந்து, 'ஆண்டுக்கு இவ்வளவு பேர்' என்று குடிபெயர்ந்து வருவோர் வந்து சேர ஆண்டுகள் பதினைந்து ஆகுமென்பதால், இந்தப் பதினைந்தாண்டுக் காலத்தில் அரசினரது 'பைல்'கள் சென்னைக்கும் -- டில்லிக்கும் போய்வருவதற்கான கால அவகாசமாக அதைப் பயன்படுத்திவிடலாகாது; உடனுக்குடனே அவசியமான முடிவுகளை எடுத்திட மத்திய அரசின் அதிகாரி ஒருவரை இங்கே இருந்திடச் செய்ய வேண்டும்.

'அந்தமான் மேம்பாட்டுக் கழகம்' அமைவது வரவேற்கத்தக்கதே; செயல்கள் துவங்கிட முதல் நடவடிக்கையாக அது அமையட்டும். பிரச்சினைகளை ஒத்திப்போடப் பயன்படுவதாக அந்த நிறுவனம் ஆகிவிடக் கூடாது.

அந்தமானில் உள்ள தட்பவெப்ப நிலை இலங்கையில் உள்ளது போன்றதென்று அறிகிறோம். அங்கு பழத் தோட்டங்கள், ரப்பர் மரத் தோட்டங்கள் பயிரிட முடியும்.

மத்திய அரசும் மற்றோரும் ஒத்துழைத்தால் அங்கு கப்பல் கட்டும் தளம் ஒன்றும் அமைக்க முடியும்.

இந்திய--இலங்கைத் தலைமை அமைச்சர்கள் கூடிப் பேசி சுமூகமானதும் மகிழ்ச்சிகரமானதுமான சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்கிறார்களென்பதை அறிய நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்; அதன் விளைவாக இலங்கையிலிருந்து வருவோர் கணிசமான தொகையைக் கொண்டுவர இயலுமென அறிகிறோம்."

# மாநிலங்களை ஆட்டிப் படைக்க நினையாதீர்!

## அவசரச் சட்டம் பிறப்பிக்குமுன் மாநிலங்களைக் கலக்காததேன்?

### மக்களவையில் முரசொலி மாறன் கண்டனம்

புதுடில்லி, டிச. 4—

"கடந்த இரண்டாண்டுக்காலத்தில் மத்திய--மாநில அரசுகளுக்கிடையே உள்ள உறவு நிலை பாதிக்கப்பட்டிருப்பதற்கான காரணங்களைக் கண்டறியும்பொருட்டு ஓர் உயர்தரக் கமிஷனோ, நாடாளுமன்றக் குழுவோ அமைக்கப்பட வேண்டும்" என்று கோரும் ஜனசங்க உறுப்பினர் திரு. கன்வர்லால் குப்தாவின் தனி நபர் தீர்மானத்தின்மீது, இன்று மக்களவையில் காரசாரமான விவாதம் நடைபெற்றது.

அரசியல் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, மத்திய -- மாநில அரசுகளுக்கிடையே நல்லுறவு நிலைக்க மாநிலங்களுக்கிடையிலான குழு ஒன்றையும் நிறுவுமாறு அவர் யோசனை தெரிவித்தார்.

பல்வேறு தரப்புக்களைச் சேர்ந்த உறுப்பினர்களும் திரு. குப்தாவின் யோசனையை வற்புறுத்திப் பேசினர்.

கழக உறுப்பினர் முரசோலி மாறன் பேசுகையில், 'இப்படி, ஒரு குழு அமைத்துவிட்டால் பிறகு மாநிலங்கள்மீது ஆதிக்கம் செலுத்த மத்திய அரசுக்கு வாய்ப்பில்லாமல் போய்விடும் என்பதால் தான் இக்குழு அமைக்கப்படவில்லையா?' என்று வினவினார்.

'நான் சார்ந்துள்ள கட்சி, நாட்டின் ஒற்றுமையைக் காப்பதில் யாருக்கும் பின்வாங்கியதில்லை; ஒற்றுமையை நோக்கி நாம் அடி எடுத்து வைக்கும்போது, அதைத் தடுத்து நிறுத்தும்வகையில் கேரளத்துக்கு எதிரான கெடுபிடிப் போர் நடத்தப்படுகிறது" என்றார் அவர்.

"மாநிலங்களின் விவகாரங்களில் மத்திய அரசு தலையிட்டு, அச்சுறுத்துவது தொடர்ந்து நடந்துவருகிறது" என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

கடந்த செப்டம்பர் 19-ம் நாள் நடந்த இந்திய அரசு ஊழியர் வேலைநிறுத்தத்தைத் தடை செய்யும் அவசரச் சட்டத்தைப் பிறப்பித்திருப்பதற்குமுன் மாநில அரசுகளுடன் கலந்தாலோசித்திருக்க வேண்டும்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

"சர்க்கசில் சவுக்கைச் சொடுக்கி மிருகங்களை அச்சுறுத்தித் தன் விருப்பம்போல் மிருகங்களை ஆட்டிப் படைக்கும் 'ரிங் மாஸ்டர்' போல் மத்திய அரசு, மாநிலங்களை ஆட்டிப் படைக்க உரிமையில்லை" என்று அழுத்தந்திருத்தமாகக் கூறினார்.

திரு. முரசொலி மாறன் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"மத்திய அரசு தன் விருப்பம் போல் நடந்துகொண்டது போன்று மாநில அரசுகளும் நடந்து கொள்ளலாமா? -- மத்திய அரசு அவசரச் சட்டம் போட்டதுடன், மாநிலத்திற்கு தன் போலீசையும் அனுப்பலாமா? -- என்ற உண்மையான கேள்விதான் செப்டம்பர் வேலை நிறுத்தத்தின் போது எழுந்தது" என்று நம்பூதிரிபாடு சொல்லுவதை நானும் ஆமோதிக்கிறேன்.

அரசியல்சட்டத்தில் குறிப்பிடப்படாமலிருந்தும், குடியரசுத் தலைவர் அவசரச் சட்டத்தைப்

(4-ம் பக்கம் பார்க்க)

## மாநகராட்சிக்குப் புதிய ஆணையர்

சென்னை, டிச. 4—

சென்னை மாநகராட்சிமன்றத்தின் புதிய ஆணையராக திரு. கே. ஜே. எம். ஷெட்டி நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை அவர் வருவாய்த் துறை வாரியத்தின் செயலாளராக இருந்துவந்தார்.

மாநகராட்சி ஆணையர் திரு. அம்பாசங்கர் விடுமுறையில் செல்கிறார்.

இலங்கை — பர்மாவிலிருந்து திரும்பிவரும் . . . . .

# அகதிகள் மறுவர்ழ்வு நலனுக்கு மத்திய அதிகாரி நியமனம்

## தென் மாநிலங்களின் திட்டங்களை ஒருங்கிணைத்துப் பணியாற்றுவார்

### தலைமை அலுவலகம் சென்னையில் இயங்கும்

சென்னை, டிச. 4—

இலங்கை, பர்மா ஆகிய நாடுகளிலிருந்து வரும் அகதிகளைக் குடியமர்த்துவதற்கான தென் மாநிலங்களின் திட்டங்களை ஒருங்கிணைக்கவும், மத்திய அரசுக்கும் -- தென் மாநிலங்களுக்குமிடையே இணைப்பு அலுவலராக இருக்கவும், மத்திய மறுவாழ்வு அதிகாரி ஒருவரை இந்திய அரசு நியமித்திருக்கிறது; அவர், உயர் அதிகாரம் கொண்டவராக இருப்பார்.

அந்த அதிகாரியின் தலைமை அலுவலகம் சென்னையில் இருக்கும்; அவர் தமது அலுவலை இத்திங்களில் துவங்குவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மைசூர், திருவனந்தபுரம், ஐதராபாத் ஆகிய இடங்களில் அவருடைய உதவி அதிகாரிகள் இருப்பார்கள்; அகதிகள் மறுவாழ்வுத் துறையின் தலைவர் மனுபாய் ஷா, இத்தகவலை, செய்தியாளர்களிடம் கூறினர்; 'காலதாமதத்தைத் தவிர்க்கும் வகையில், இவ்வாறு மத்திய அதிகாரி ஒருவர் தென்னகத்தில் தமது அலுவலகத்துடன் செயல்பட வேண்டும்' என்று தமிழக முதலமைச்சர் தெரிவித்த யோசனைக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினர்.

# பயிற்சி மொழியாக தமிழ்

## பாட நூல்கள் அச்சிடப் புதிய திட்டம்

சென்னை, டிச. 3—

"தமிழில் ஏராளமான பாட நூல்களும், துணை நூல்களும் தயார் செய்தற்கான திட்டமொன்றைத் தமிழக அரசு, விரைவில் மத்திய அரசுக்கு அனுப்பிவைக்கும்; அந்தத் திட்டம் கிடைத்ததும் மத்திய அரசு அதை ஆய்வு செய்து மானிய உதவியில் ஒரு பகுதியை முன்கூட்டியே அனுமதிக்கும்"

என்று மத்திய கல்வித் துறைத் துணையமைச்சர் பேராசிரியர் ஷெர் சிங் தெரிவித்தார்.

"தமிழ் மொழி தொன்மைவாய்ந்தது -- மகத்தானது; எல்லாப் பாடங்களுக்கும் அதைப் பயிற்சி மொழியாக ஆக்கினல், அது மேலும் வளமுறும்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

"வட்டார மொழிகளைப் பாட மொழியாக ஆக்க வேண்டுமெனில், அந்த மொழிகளில் பாட நூல்களும், துணை நூல்களும் ஏராளமாகத் தயாரிக்கவேண்டியது அவசியமாகும்; இதற்காகப் பல்வேறு மாநிலங்களும் திட்டங்களை அனுப்பிவைத்துவருகின்றன; மத்திய அரசு 75 சதவிகித மானிய உதவி அனுமதிக்கிறது. இந்த வகையில் ஒவ்வொரு மாநிலத்துக்கும் ரூ. 7 கோடிவரை கிடைக்கும்" என்று அவர் சொன்னர்.

# மாபெரும் பிரச்னையாக உருவாகிவிட்டது

### மத்திய அமைச்சர் தகவல்

அகதிகள் மறுவாழ்வுத் துறையின் ஐந்தாவது கூட்டம் இராஜாஜி மண்டபத்தில் கூடியது.

ஆந்திரப் பிரதேசம், தமிழ்நாடு, கேரளம், மைசூர் மாநிலங்களில் அகதிகள் மறுவாழ்வுத் திட்டங்கள் எவ்வாறு செயல்பட்டுவருகின்றன என்பதுபற்றி இக்கூட்டம் பரிசிலனை செய்தது; தோட்டங்கள் பற்றிய தனிக் குழுவின் அறிக்கையையும் விவாதித்தது.

கூட்டத்தில் உரையாற்றுகையில் மறுவாழ்வுத் துறையின் தலைவரும் மத்திய அமைச்சருமான மனுபாய் ஷா கூறியதாவது:—

"பர்மாவிலிருந்தும், இலங்கையிலிருந்தும் வெளியேற்றப்பட்டு வந்துள்ளவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் அலுவல்கள், ஓர் தேசியப் பிரச்சினையாகவே உருப் பெற்றுவிட்டது.

பர்மாவிலிருந்து ஏறக்குறைய 1,63,000 பேர் ஆகஸ்டு வரையில் வந்திருக்கின்றனர்; ஆண்டுக்கு 10,000-பேர் என்ற அளவில், இன்னமும் பர்மாவிலிருந்து இவர்கள் வரக்கூடும்.

இந்திய -- இலங்கை உடன்படிக்கையின்படி, 5,25,000-பேருக்குக் குடியுரிமை வழங்கி, அவர்களை இந்நாட்டில் குடியமர்த்தும் பொறுப்பை இந்திய அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது; இவர்களுள் சுமார் 6,000 பேர் ஏற்கனவே வந்துவிட்டனர்; சொந்த முயற்சியினல் அவர்கள் குடியமர்ந்துவிட்டனர்.

1969-70-ம் ஆண்டிலிருந்து ஆண்டுதோறும் சுமார் 35,000 பேர் இலங்கையிலிருந்து வரக்கூடும்.

இவ்வாருக இது, ஒரு மாபெரும் பிரச்சினையாக உருவாகி விட்டது.

இதுவரையில் பர்மாவிலிருந்து வந்துள்ள குடும்பத்தினரில் பெரும்பாலானவர்களுக்குக் கடனுகவும், நிலமாகவும், வேலைவாய்ப்பாகவும் மறுவாழ்விப்பு உதவி வழங்கப்பட்டிருக்கிறது.

இலங்கையிலிருந்து வருவோரது மறுவாழ்விப்புப் பிரச்சினைதான் மிகப் பெரிதாக இருக்கிறது. இந்தியப் பொருளாதார அமைப்பில் இத்தனைப் பேரையும் சேர்த்துக் கொள்வது நமது நிர்வாக அமைப்புக்கு ஒரு மாபெரும் பணியாக இருக்கும்; நல்லவேளை -- அங்கிருந்து வருவோர் 15 ஆண்டுகளில்தான் வரப்போகிறர்கள்; ஆகவே, பல கட்டங்களில் திட்டமிட்டு நாம் அவர்களைக் குடியமர்த்த வேண்டும்.

இவர்களுள் சுமார் 25 சதவிகிதத்தினர்தான் அரசாங்கத்தின் மறுவாழ்விப்பு உதவியில்லாமல் சொந்தமாகவே வாழ்க்கை வசதிகளைத் தேடிக்கொள்ளும் அளவுக்கு இந்தியாவில் தொடர்புகொண்டிருக்கிறர்கள். எஞ்சிய குடும்பத்தினரின் மறுவாழ்விப்புக்கு நாம் திட்டமிட வேண்டும்.

கிழக்குப் பாகிஸ்தானிலிருந்தும், பர்மாவிலிருந்தும் வந்துஎள அகதிகளின் மறுவாழ்வுக்காக வழங்கப்பட்டுள்ள உதவிகள் அனைத்தும் இலங்கையிலிருந்து வருவோருக்கும் வழங்கப்படும்.

ஆந்திரப் பிரதேசம், கேரளம், தமிழ்நாடு, மைசூர் அரசுகள், இலங்கையிலிருந்து வருவோரை பல்வேறு தோட்டங்களிலும் விவசாயத் திட்டப்பகுதிகளிலும் குடியமர்த்துவதற்கான வாய்ப்புக்களை ஆராய்ந்து வருகின்றன.

400 குடும்பங்களைக் குடியமர்த்தும் பொருட்டு நீலகிரிப் பகுதியில் தேயிலைத்தோட்ட திட்டம் ஒன்றுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

தமிழகத்தில் 100 குடும்பத்தினரைக் குடியமர்த்தும்பொருட்டு தென்னந்தோப்புத் திட்டம் ஒன்றுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

மைசூர், கேரளம், ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களிலும் இவ்வாறு பல திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன.

இவற்றின் பலனுக ஏராளமான அகதிகள் குடியமர்த்தப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

"அகதிகளுக்கிடையே கூட்டுறவு உணர்வை உருவாக்கி, கடன் வசதிகளை அவர்கள் உரிய விதத்தில் பயன்படுத்துமாறு பார்த்துக்கொள்வதற்கென கூட்டுறவு நிதி--அபிவிருத்தி பாங்கி ஒன்றை அமைக்கலாம் என்று மறுவாழ்விப்புத்துறை சிபாரிசு செய்திருக்கிறது."

## துணைக் குழுவின் சிபாரிசுகள்

"இலங்கை அகதிகளை குடியமர்த்தும் திட்டங்களை நிறைவேற்ற நான்கு தென் மாநில அரசுகளுக்கு மத்திய அரசு தாராளமாக நிதி உதவி அளிக்கவேண்டும்"

என்று அகதிகள் மறுவாழ்வுத் துறை நிறுவியுள்ள தோட்டங்கள் பற்றிய துணைக் குழு சிபாரிசு செய்திருக்கிறது.

"சமூக நலச் செலவுக்கு 100 சதவிகித மானியமும், வீட்டு வசதிக்கு 50 சதவிகித மானியமும் மத்திய அரசு மாநிலங்களுக்கு அளிக்கவேண்டும்" என்றும் சிபாரிசு செய்துள்ளது.

தோட்டங்களை விரிவுபடுத்த ஆந்திராவில் 5,000 ஏக்கர்களும், கேரளாவில் 50,960 ஏக்கர்களும், தமிழ்நாட்டில் 29,608 ஏக்கர்களும், மைசூரில் 48,000 ஏக்கர்களும் கிடைக்கும் என்றும், இவற்றில் 64,703 அகதிகளுக் வேலை அளிக்கலாமென்றும் குழு கருதுகிறது.

சாகுபடி செய்ய நான்கு மாநிலங்களிலும் 49,437 ஏக்கர் நிலம் கிடைக்கும் என்றும், இதில் 8,358 குடும்பங்களை குடியமர்த்தலாமென்றும் குழு தெரிவித்துள்ளது.

தோட்ட விரிவுக்குத் தடங்கலாக உள்ள சட்ட விதிகளைத் தளர்த்தலாமென்றும் குழு யோசனை கூறுகிறது.

நில மீட்புக்கு ஏற்படும் செலவில் 75 சதவிகிதமும், சமூக நலச் செலவுக்கு ஏற்படும் செலவில் 100 சதவிகிதமும், பாசன வசதி சாதனங்களுக்காக ஏற்படும் செலவில் 50 சதவிகிதமும் மத்திய அரசு மானியமாக அளிக்கலாமென்று குழு பரிந்துரைத்துள்ளது.

"தனியார் துறை தேயிலைத் தோட்டங்களில் குடியமர்த்தப்படும் அகதிகளுக்கு ரூ 7,000 வீதமும், காபித் தோட்டங்களில் குடியமர்த்தப்படும் அகதிகளுக்கு ரூ 7,000 வீதமும், ரப்பர் தோட்டங்களில் குடியமர்த்தப்படுவோருக்கு ரூ. 9,000 வீதமும் கடன்கள் கொடுக்கலாம்; காபி, தேயிலை, ஏலக்காய்த் தோட்டங்களுக்குக் கொடுக்கப்படும் கடனுக்கு ஐந்தாண்டுகளுக்கு வட்டி வசூலிக்கலாகாது; ரப்பர் தோட்டங்களுக்கு வழங்கப்படும் கடன்களுக்கு ஏழாண்டுகளுக்கு வட்டி வசூலிக்கலாகாது; கடன் கொடுத்த முதல் தவணையிலிருந்து 15 ஆண்டுகளுக்குள் கடனை வட்டியுடன் வசூலிக்க வேண்டும்" என்று குழு சிபாரிசு செய்துள்ளது.

அடுத்த ஆண்டுமுதல் 15 ஆண்டுகளில் இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு 5.25 இலட்சம் இந்தியர்கள் (பெரும்பாலும் தமிழர்கள்) திருப்பி அனுப்பப்படுவர்.

## குற்றமற்றிருந்தால் . . . . !

நாம் எந்த அளவுக்குக் குற்றமற்று இருக்கிறேமோ, அந்த அளவுக்கு வலிமை பெறுவோம்; அந்த அளவுக்கு எளிதாக வெற்றியும் பெறுவோம்.

—காந்தியார்

# கோவில் சொத்துக்களைச் சுரண்டிய பெருச்சாளிகள் எங்கே?

## தஞ்சைப் பெரிய கோயில் நிலம் மறைந்த மாயம்!

### தகவல் கொடுத்தால் தக்க நடவடிக்கை-- அமைச்சர் நெடுஞ்செழியன் அறிவிப்பு

திருச்சி, டிச. 3—

"கோவில்களைச் சேர்ந்த சொத்தை யாராவது சட்ட விரோதமாக அனுபவித்துக் கொண்டிருந்தால், அதனை அரசின் கவனத்துக்குப் போதுமக்கள், தாராளமாகக் கொண்டு வரலாம்; அதனைக் குறித்து அரசு விசாரிக்கும்"

என்று அறநிலைய அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் கூறினர்.

திருவரங்கத்தில் அரங்கநாதர் தேவஸ்தானத்தின் பொருட்காட்சிக்காகக் கட்டப்பட்ட புதிய கட்டிடத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"தஞ்சாவூர் கோவிலுக்கு 16 இலட்சம் கலம் நெல் வரக்கூடிய நிலங்களை இராச இராச சோழர் விட்டுச் சென்றதாகத் தெரிகிறது. ஆனல் தற்போது கோவிலுக்கு சொந்தமாக நிலம் எதுவும் இல்லை.

"கோவில்களின் சொத்துக்களைச் சமுதாய நலனுக்குப் பயன்படுத்த வேண்டும்.

"கோவில்களை மிகவும் சுத்தமாக வைத்துக் கொள்வது அவசியமாகும்.

"கோவில்களிலுள்ள சிற்பங்களின் கலை அழகை, உரியவாறு பேணிப் பாதுகாக்க வேண்டும்."

# நகராட்சிப் பள்ளிகளின் எதிர்காலம்

### அரசு பரிசீலிப்பதாக அமைச்சர் தகவல்

திருவரங்கம், டிச. 3—

"தமிழகத்தில் அரசாங்க உதவி பெறும் பள்ளிகளுக்கு இப்போது அளிக்கப்படும் எல்லாச் சலுகைகளையும், உதவித் தொகைகளையும் நகராட்சிகளால் நடத்தப்படும் பள்ளிக்கூடங்களுக்கும் விரிவுபடுத்த இயலுமா என்பதுபற்றி அரசு பரிசீலனை செய்து வருகிறது" என்று கல்வியமைச்சர் இரா. நெடுஞ்செழியன் கூறினர்.

திருவரங்கம் நகரசபை அளித்த வரவேற்புக்குப் பதிலளித்துப் பேசுகையில் மேலும் அவர் கூறியதாவது:—

"நகராட்சிகளால் நடத்தப்படும் உயர்நிலைப் பள்ளிகளை அரசு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று பல நகராட்சிகள் கோருகின்றன; தமிழகத்தில் சுமார் 90 நகராட்சி உயர்நிலைப் பள்ளிகள் உள்ளன; இவை அனைத்தையும் அரசு எடுத்துக்கொள்ளுவதானல் புதிய உயர்நிலைப் பள்ளிகளைத் தொடங்குவது சிரமமாக இருக்கும்.

"அதனுல்தான், நகராட்சி உயர்நிலைப் பள்ளிகளுக்கு அளிக்கப்படும் உதவித் தொகைகளை 50 சதவிகிதத்திலிருந்து, 1968-69-ல் 66.6 சதவிகிதத்திற்கு அரசு அதிகப்படுத்தியிருக்கிறது; அடுத்த நிதி ஆண்டு முதல் இந்த அளவை மேலும் அதிகப்படுத்த முடியுமா என்பதுபற்றி அரசு பரிசீலிக்கும்"

# நூறே நிமிடங்களில் வீடு

## ஜி. டி. நாயுடுவின் புதிய சாதனை

### அமைச்சர் ஏ. கோவிந்தசாமி பாராட்டு

கோவை, டிச. 4—

தம் நுண்ணறிவாலும், அறிவியல் ஆராய்ச்சியாலும் பல அரிய சாதனைகளைப் புரிந்துவரும் வித்தகர் ஜி. டி. நாயுடு அவர்கள், நூறே நிமிட நேரத்தில் ஒரு வீட்டைக் கட்டி முடித்துக் காட்டியிருக்கிறர்.

தமிழக வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. ஏ. கோவிந்தசாமி முன்னிலையில் இது நடைபெற்றது. பிற்பகல் 3-30 மணிக்கு அமைச்சர் அடிக்கல் நாட்டினர்; மாலை 5-10 மணிக்கு புதிய வீட்டை அவரே திறந்தும் வைத்தார்.

105 சதுர அடி பரப்பளவில் எட்டுச் சுவர்களைக் கொண்ட இந்த வீட்டைக் கட்டும் வேலையில் 10 பேர்களே ஈடுபட்டனர்.

இதுபற்றி திரு ஜி. டி. நாயுடு பேசுகையில் கூறியதர்வது:—

'நாட்டின் குடியிருப்புப் பிரச்சினை நீங்க இன்னும் 8 இலட்சம் வீடுகள் தேவை; இதற்கு ரூ. 30,000 கோடி தேவைப்படும்.

ஆனல், நான் சொல்லும் முறைப்படி கட்டினல் ரூ 10,000 கோடி போதும்; 40 ஆண்டுகளில் பிரச்சினை தீர்ந்துவிடும்."

அமைச்சர் திரு. ஏ. கோவிந்தசாமி அவர்கள், அறிவியல்மேதை ஜி. டி. நாயுடு அவர்களின் சாதனைகளைப் பாராட்டிப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"இத்தகைய வீடுகள் கட்டப்படுவது வரவேற்கத்தக்கதாகும். ஆனல் இதே வேகத்தில் கட்டக்கூடிய கொத்தனர்கள் எல்லா இடங்களிலும் கிடைப்பார்களா என்பதுதான் ஐயத்திற்குரியது.

குறைந்த செலவில் வீடு கட்டும் பயிற்சி நிலையத்தைத் திரு. ஜி. டி. நாயுடு துவக்கியிருப்பதும் நல்ல ஏற்பாடாகும்.

அவரது யோசனைகளுக்குத் தமிழக அரசு தக்க மதிப்பளித்து அவற்றை ஆராயும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்."

# இந்தியா எதிர்பட்டுள்ள சோதனைக் காலம்

## கடுமையான உழைப்பின்மூலமே சமாளிக்க முடியும்

### எச். வி. ஆர். ஐயங்கார் வலியுறுத்தல்

சென்னை, டிச. 4—

"பொருளாதார வளமை அடைவதற்கு எல்லாத் துறைகளிலும், உற்பத்தியை உயர்த்துவதற்கான கடும் உழைப்பைத் தவிர வேறு மாற்றுவழி கிடையாது.

"உற்பத்தியைப் பெருக்குவதற்கு இன்னும் பெரிய அளவில் மன உறுதியும், விடாமுயற்சியும் வேண்டும். நாட்டின் பிரச்சினைகள் தீருவதற்கு இதுதான் வழி என்பதை ஒவ்வொருவரும் உணரவேண்டும்"

என்று முன்னாள் ரிசர்வ் பாங்கி கவர்னரும், தொழிலதிபருமான எச். வி. ஆர். ஐயங்கார் கூறினர்.

சென்னை கிறித்துவக் கல்லூரி பொருளாதார சங்கம் நடத்திய கருத்தரங்கில் திரு. எச். வி. ஆர். அய்யங்கார் பேசுகையில் மேலும் குறிப்பிட்டதாவது :—

"நமது நாடு மாபெரும் முன்னேற்றம் அடையுமென்பதில் ஐயமில்லை.

இந்தியாவைப்போல் இத்தகைய சோதனைகள் உலகில் வேறெங்கும் நேர்ந்ததில்லை.

நாம் அடைந்துள்ள முன்னேற்ற வேகம் திருப்தியளிப்பதாக இருக்கிறதா என்று ஊன்றிப் பார்க்க வேண்டும்! வேகம் குறைந்திருந்தால் பழைய வேகத்தைப் பெற நடவடிக்கை எடுக்கவேண்டும்.

நம்மிடமுள்ள மக்கள் தொகையைக் கொண்டு—குறைந்தகால அளவில்— நம்முடைய வாழ் நாளில் நாடு முன்னேறி— மக்களின் வாழ்க்கைத் தரம் உயருவதற்குரிய வேகத்தை எய்த முடியும்.

பதினைந்து ஆண்டுகளாகத் திட்டவேலை அனுபவம் உள்ளது. மிகப்பெரிய உதவியோ அல்லது கொள்கைகளோ இல்லாமலே, கடும் உழைப்பைக்கொண்டு முன்னேறமுடியுமெனக் கண்டோம்.

சுதந்தரம் அடைந்ததிலிருந்து பல திறமையான விஞ்ஞானிகள் தேர்வு பெற்றிருப்பதும், மாணவர்கள் வாய்ப்புகளைப் பெற்றிருப்பதும், 'நம் கையில் நல்ல பொருள் உண்டு; நம்நாடு உண்மையில் சிறப்படைந்துள்ளது' என்பதற்கு அறிகுறியாகும்.

தொழில் உற்பத்திமூலம் வரும் உரவகைகள், பூச்சி மருந்து வகைகளுக்கு ஏராளமான கிராக்கியுள்ளது; இதற்குத் தேவையான இயந்திரச் சாதனங்களை இறக்குமதி செய்தாலன்றி நோக்கம் ஈடேறாது; உள்ளூர்த் தொழிலறிவைப் பயன்படுத்தி உள்நாட்டுப் பொருள்களைக்கொண்டு இயந்திரங்களைக் கட்டக்கூடிய திறமையை வளர்ப்பதில்தான் இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும்.

ஓர் அலுமினியம் கம்பெனி பத்து ஆண்டுகளில் தனக்குத் தேவையான இயந்திரங்களைக் கட்டுவதில் வழிகாட்டியுள்ளது.

அந்நிய நாணயச் செலாவணியைக் கோராமல், புது ஆலையைக் கட்டும் திறன் விரைவில் வருமென்று நம்புகிறேன். ஜப்பானில் அன்று நடந்தது. அதே போல இங்கும் நடக்கட்டும்."

## இளைஞர் — மாணவர் அமைப்புகள் கவனிக்க:

புதுடில்லி, டிச. 4—

இந்திய இளைஞர் கழகத்தின் முயற்சியால் அனைத்து நாட்டு இளைஞர் அமைப்பு ஒன்று நிறுவ முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்தக் கழகம் பல நாடுகளின் இளைஞர் கழகங்களுக்கு ஒத்துழைப்பு அளித்து வருகிறது.

இக்கழகத்தினர் நாட்டிலுள்ள பல்வேறு இளைஞர் சங்கங்கள், மாணவர் அமைப்புகள் ஆகியவற்றின் பட்டியலைத் தயாரித்து வருகிறது. ஆங்காங்குள்ள இளைஞர் சங்கங்கள், மாணவர் அமைப்புகள், தங்கள் நிர்வாகிகளின் பெயர்களைக் கீழ்க்காணும் முகவரிக்குத் தெரிவித்துத் தொடர்புகொள்ளுமாறு மேற்படி கழகத்தினால் கேட்டுக் கொள்ளப்படுகிறர்கள் :—

The Director, International Youth Centre, C-502, Defence Colony, New Delhi-3.

# நெல்லையில் இரண்டடுக்கு பாலம்

### தென்னகத்திலேயே முதலாவது

சென்னை, டிச. 4—

"திருநெல்வேலி சந்திப்புக்கு அருகில் நெல்லையப்பர் சாலையில் தற்போதுள்ள இரயில்வே கேட்டுக்குப் பதிலாக, இரண்டடுக்குப் பாலம் ஒன்று அமைக்கப்படும்"

என்று பொதுப்பணித் துறை அமைச்சர் மு. கருணநிதி, நிருபர்களிடம் தெரிவித்தார்.

மேல் தளத்தில் கார்களும், கீழ்த் தளத்தில் பாதசாரிகளும், சைக்கிள்களும் போவதற்கு ஏற்ற வகையில் அது அமைந்திருக்கும்.

இந்த மாதிரி பாலம் தென்னிந்தியாவில் அமைக்கப்படுவது இதுவே முதல் தடவையாகும்.

# அரிசி விலை ஏறவில்லை

### காங்கிரசு ஏட்டுக்குக் கழகச்செயலாளர் மறுப்பு

கீழஆம்பூர், நவ. 27—

நெல்லை மாவட்டம் ஆம்பூர், கிருஷ்ணபுரம் பகுதியில் அரிசி படி ரூ. 2.30 முதல் 2.60 வரை விற்பதாக காங்கிரசு நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டிருந்ததை மறுத்து, கீழஆம்பூர் தி. மு. க. செயலாளர் கீழ்வருமாறு அறிவிக்கிருர் :

கீழஆம்பூரில் வெளிமார்க்கெட்டில் தரமான அரிசிபடி ரூ. 1.30 முதல் 1.50 வரைதான் விற்கிறது சாதாரண அரிசி ரூ. 1.25 முதல் 1.30 வரை விற்கிறது. இந்த விலைக்கு எங்கும் தாராளமாகக் கிடைக்கிறது.

# கள்ள நோட்டு விநியோகத்தில் காங்கிரசு அமைச்சர்கள்?

## மடாதிபதிகளும் ஈடுபட்டிருப்பதாகத் தகவல்

### விசாரணைக் குழு நியமிக்க நாடாளுமன்றத்தில் கோரிக்கை

புதுடில்லி, டிச. 4—

"அந்நிய நாட்டுப் பொருள்களை விற்போர் அந்தப் பொருள்கள் தங்களுக்கு எங்கிருந்து கிடைத்தன என்பதைக் குறிப்பிட்ட காலத்திற்குள் கட்டாயமாகத் தெரிவிக்க வேண்டும்.

"அந்தப் பொருள்கள் எங்கிருந்து கிடைத்தன என்பது பற்றிய விவரங்கள் திருப்திகரமாயில்லாவிட்டால் அவற்றைப் பறிமுதல் செய்வதற்கு, வகை செய்யும் ஒரு மசோதா நாடாளுமன்ற நடப்புக் கூட்டத் தொடரில் கொண்டுவரப்படும்"

என்று மக்களவையில், துணைத் தலைமை அமைச்சர் மொரார்ஜி தேசாய், நாட்டில் கள்ள ரூபாய் நோட்டுகள் புழங்குவது பற்றிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

சீனவில் அச்சடிக்கப்பட்டதாகச் சொல்லப்படும் கள்ள நோட்டுகள் இங்கு புழங்குவது பற்றிச் சரமாரியாகக் கேள்விகள் கேட்கப்பட்டன; இவற்றுக்குப் பதிலளித்து அவர் கூறியதாவது :—

"அண்மையில் வர்த்தகத் தூதுக்குழு ஒன்று, காட்மாண்டு சென்று, நேபாள அரசுடன் இதுபற்றி விவாதித்தது; பண்டங்களும், கரன்சி நோட்டுகளும் கள்ளத்தனமாகக் கடத்தப்படுவதைத் தடுக்கச் சில நடவடிக்கைகளை மேற்கொள்வதாக நேபாள அரசு ஒப்புக்கொண்டுள்ளது.

கள்ள நோட்டுகள் தயாரிக்கப்படுவது பற்றிப் புலன் விசாரணையை மேற்கொள்ளவும், மாநிலங்களில் இது சம்பந்தமாக நடக்கும் விசாரணைகளை ஒருங்கிணைக்கவும், மத்தியப் புலன் விசாரணைத் துறை, பொருளாதாரப் பிரிவில் ஓர் அமைப்பை ஏற்படுத்தியுள்ளது. சுங்க அதிகாரிகளும் விழிப்புடன் இருக்கச் செய்யப்பட்டுள்ளனர்.

இது ஒரு நிரந்தரத் தொல்லையாகும்; இது தொடர்ந்து நடக்கும்; ஆனல், இந்தக் குற்றத்தை இயன்ற அளவுக்குக் குறைக்க வேண்டும்."

"போய்க் கையெழுத்திட்ட கள்ள நோட்டுகள் எல்லா மாநிலங்களிலும் மட்டுமல்லாமல் மைசூரிலும் புழங்குகின்றன; மடங்கள் மூலமாக அவை விநியோகிக்கப்படுகின்றன; சில சாமியார்களும் இதில் சம்பந்தப்பட்டிருக்கின்றனர்; சில காங்கிரசு அமைச்சர்களும் இவற்றிற்கு உடந்தையாக இருக்கின்றனர்; இதை முழு அளவில் விசாரிக்க அரசு ஒரு குழுவை நியமிக்குமா?"

என்று ச. சோ. கட்சி உறுப்பினர் கே. இலக்கப்பா சுட்டிக்காட்டி வினவினர்.

"இதுபற்றி விசாரிக்கப்படுகிறது; இதற்குக் குழு அவசியமில்லை" என்று நிதித் துறைத் துணையமைச்சர் கே. சி. பந்த் கூறினர்.

"நேபாலில் கள்ள நோட்டுகள் மட்டுமன்றி சீன நாணயங்களும் கிடைக்கின்றன" என்று ஹேம் பருவா கூறினர்.

சென்னையில் ரூ. 45,730 மதிப்புள்ள பத்து ரூபாய் கள்ள நோட்டுகளைப் போலீசார் கைப்பற்றியிருப்பதாகவும், இப்போது இம்மாதிரி நோட்டுகள் புழக்கத்தில் இருப்பதாகத் தகவல் இல்லை என்றும் துணையமைச்சர் பந்த் கூறினர்; 'இது சம்பந்தமாகச் சென்னையில் 19 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்; இவ்வழக்குப் பற்றி புலன் விசாரணை நடந்துகொண்டிருக்கிறது' என்றும் கூறினர்.

# முன்பு அளித்த உதவி என்ன ஆயிற்று?

## இனி உதவியை எதிர்பார்க்காதீர்

### இந்தியாவிடம் இரஷ்யா அறிவிப்பு

புதுடில்லி, டிச. 4—

இந்தியாவில் சோவியத் உதவிபெற்ற திட்டங்கள் ஏற்கனவே '28' இருக்கின்றன; இத்திட்டங்கள், அவற்றின் முழு அளவுக்குப் பயன்படுத்திக்கொள்ளப்படும்வரையில், மேற்கொண்டு இந்தியாவுக்குத் திட்ட உதவியளிக்க முடியாதென்று சோவியத் இரஷ்யா முடிவு செய்திருக்கிறதாம்.

சோவியத் அரசின் இந்த முடிவு இந்தியாவுக்கு வந்துள்ள சோவியத் வெளிநாட்டு உதவிக் குழுவின் தலைவரான ஸ்காச்கோவினல் சென்றவார இறுதியில், பொருளாதாரத் துறையமைச்சரிடம் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் திட்டங்களின் உற்பத்திகளை இனி இரஷ்யா பெரும் அளவுக்கு வாங்கமுடியாதென்று அவர் தெரிவித்துவிட்டார்.

பிலாய் உருக்குத் தொழிற்சாலையிலிருந்து முன்பு இரஷ்யா நிறைய வாங்கியது; ஆனல், அது தற்காலிகமான உதவியென்றும், தொடர்ந்து அப்படிச் செய்துகொண்டிருக்க முடியாதென்றும் சொல்லிவிட்டார்களாம்.

இந்தத் தொழிற்சாலைகளின் உற்பத்திச் சக்தி இந்தியாவின் தேவைக்கு அதிகமாக இருக்கிறது என்று இந்திய அரசு கூறியதை இரஷ்யா ஒப்புக்கொள்ளவில்லை; 'இந்தத் தொழிற்சாலைகளின் உற்பத்திகளை விற்பதற்கான பொறுப்பு இந்தியாவினுடையதே' என்று அவர்கள் சொல்லுகிறர்கள்.

நான்கைந்து ஆண்டுகளுக்காவது சோவியத் இரஷ்யா இந்த உற்பத்திகளை வாங்க வேண்டுமென்று இந்திய அமைச்சர் பக்ருதீன் அகமது கோரியதை இரஷ்யர்கள் ஏற்கத் தயாராக இல்லை.

சோவியத் உதவியுடன் இந்தியாவில் இயங்கிக்கொண்டிருக்கும் தொழிற்சாலைகள் எப்படி வேலை செய்கின்றன என்பதை நேரில் பார்த்தறிவதற்காகவே இந்த இரஷ்யக் குழு இந்தியாவுக்கு வந்திருக்கிறது.

மேற்கொண்டு உதவியளிப்பதைப்பற்றி அவர்கள் ஒன்றும் வாக்களிக்கமாட்டார்கள் என்பது இதுவரையில் அவர்களுடன் நடத்திய விவாதங்களிலிருந்து நன்கு தெளிவாகிறது.

ஒரு குறிப்பிட்ட வகை உருக்கை இந்தியா இப்போது இறக்குமதி செய்துகொண்டிருக்கிறது; இந்த வகையைப் பிலாய்த் தொழிற்சாலையிலேயே உற்பத்தி செய்ய முடியும் என்று இரஷ்யக் குழுவினர் நினைக்கிருர்கள். இதைச் செய்ய இந்திய அரசு முன்வந்தால், தேவையான தொழில்நுட்ப உதவியை அளிக்க இரஷ்யா தயாராக இருக்குமென்று ஸ்காச்கோவ், பக்ருதீனிடம் கூறியதாகத் தெரிகிறது.

# சன. 8-ல் நாகர்கோயில் இடைத்தேர்தல்

### வாக்காளர் எண்ணிக்கை 6.59 சதவிகிதம் உயர்வு

### 505 வாக்குச் சாவடிகள் அமைக்கப்படும்

சென்னை, டிச. 3—

6 சட்டமன்றத் தொகுதிகளைக் கொண்ட நாகர்கோயில் நாடாளுமன்றத் தொகுதி இடைத்தேர்தல், 8-ம் நாள் நடைபெறும்.

தேர்தல் தேதி விவரம் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது; அதன் விவரம் வருமாறு:—

வேட்பாளர் மனு தாக்கல் செய்யும் இறுதி நாள் டிச. 12

வேட்பு மனு பரிசீலனை டிச. 13

வேட்பு மனு திரும்பப் பெறும் இறுதி நாள் டிச. 16

வாக்குப் பதிவு சனவரி 8

வாக்கு எண்ணிக்கை சனவரி 9

வாக்குகளின் எண்ணிக்கை நாகர்கோயிலிலேயே நடைபெறும்.

மேற்கண்ட தகவல்களைத் தலைமைத் தேர்தல் அதிகாரி தெரிவித்தார்; மேலும் அவர் கூறியதாவது :—

நாகர்கோயில் தொகுதியில் மொத்தம் 481 வாக்குச் சாவடிகள் வைக்கத் திட்டமிட்டிருந்தோம்; ஆனல் வாக்காளர்கள் எவரும் 2-மைல் தூரத்துக்குமேல் செல்லக்கூடாது என்று மத்திய தேர்தல் குழு கூறியிருப்பதால் வாக்குச் சாவடிகள் எண்ணிக்கையை 505 ஆக உயர்த்த முடிவு செய்துள்ளோம்.

வாக்காளர் எண்ணிக்கை விவரம் வருமாறு :—

| | |
|---|---|
| நாகர்கோயில் | 92,858 |
| குளச்சல் | 89,783 |
| பத்மநாபபுரம் | 82,237 |
| திருவட்டாறு | 83,094 |
| விளவன்கோடு | 79,444 |
| கிள்ளியூர் | 78,053 |

மொத்த வாக்காளர்கள் எண்ணிக்கை 5,05,469

கடந்த 1967-ம் ஆண்டு தேர்தலின்போது நாகர்கோயில் நாடாளுமன்றத் தொகுதி வாக்காளர் எண்ணிக்கை 4,74,210; இப்பொழுது 31,259 வாக்காளர்கள் அதிகரித்திருக்கிருர்கள். 6.59 சதவீதம் வாக்குகள் அதிகமாகி இருக்கிறது.

திருவட்டாறில் மட்டும் 10 சதவீதமும், குளச்சலில் 3.5 சதவீதமும் அதிகரித்திருக்கிறது.

மொத்த வாக்காளர்களில் ஆண்கள் 2,61,340; பெண்கள் 2,44,129.

கடந்த தேர்தலில் வாக்களித்தவர்கள் எண்ணிக்கை 3,45,651; 72.89 சதவீதம் வாக்குகள் பதிவாயின.

## சலவையாளர்கட்குத் தமிழக அரசு வழங்கிய சலுகை

சென்னை, டிச. 4—

காங்கிரசு ஆட்சியில் சலவைத் தொழிலாளர்களுக்குச் சலவைக் கருவிகள் வாங்கக் கொடுக்கப்பட்ட கடன் தி.மு.க. அரசினரால் (உள்துறை) ரத்து செய்யப்பட்டிருக்கிறது.

தாழ்த்தப்பட்டோர் நலத்துறை மூலமாகக் கடனகக் கொடுக்கப்பட்ட தொகையை முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் ரத்து செய்திருக்கிருர்கள்.

சிதம்பரத்தில் நடைபெற்ற மாநில பிற்பட்டோர் நல ஆலோசனைக் கூட்டத்தில் இது குறித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அரசினருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

"இப்பொழுது 9—10—68-ந் தேதிய அரசாங்க உத்தரவு எண் 2986 (உள்துறை) மூலம் அது ரத்து செய்யப்பட்டிருக்கிறது" என்று, மாநில பிற்பட்டோர் நல ஆலோசனைக் குழு உறுப்பினர் சி. ஆர். கோலப்பா அறிவிக்கிருர்.

# அண்ணாவை அழைத்துப் பேசுக!

## கச்சத் தீவு பற்றி டெல்லியிடம் வற்புறுத்தல்

சென்னை, டிச. 4—

“கச்சத் தீவுபற்றி மத்திய அரசு, இலங்கை அரசுடன் எவ்வித உடன்பாட்டுக்கும் வருவதற்கு முன், தமிழக முதலமைச்சர் அண்ணா அவர்களுடன் கலந்தாலோசிக்க வேண்டும் எனத் தலைமை அமைச்சரிடமும், மற்றும் இந்திய அரசின் அதிகாரிகளிடமும் வற்புறுத்தியிருக்கிறேன்.

“‘கச்சத் தீவு, தமிழ்நாட்டின் பகுதிதான்’ என மெய்ப்பிக்கக் கூடிய 200 ஆண்டுக்காலச் சான்றேடுகளை, மத்திய அரசிடம், தமிழக அரசு ஏற்கனவே தந்திருக்கிறது”

என்று சட்ட அமைச்சர் செ. மாதவன் அவர்கள், தெரிவித்திருக்கிறார்.

# வானொலியில்

## அமைச்சர் முத்துசாமி

சென்னை, டிச. 4—

உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மா. முத்துசாமி அவர்கள், விவசாயிகளுக்கான கருத்தரங்கில் ஆற்றிய உரை, இன்று மாலை 7-30 மணிக்கு சென்னை வானொலியில் ஒலிபரப்பாகும்.

# அறிஞர் அண்ணா

## சிகிச்சை நிதி

அறிஞர் அண்ணா சிகிச்சை நிதிக்காகத் தொகை அனுப்புமாறு கழகப் பொருளாளர் மு. கருணாநிதி அவர்கள் விடுத்த வேண்டுகோளுக்கேற்ப நிதியளித்த தோழர்கள்:—

| | ரூ. காசு |
|---|---|
| இரா. நெடுஞ்செழியன் | 500.00 |
| மு. கருணாநிதி | 500.00 |
| என். வி. நடராசன் எம்.எல்.சி. | 101.00 |
| ‘முரசொலி’ இதழின் சார்பாக— தோழர் செல்வம் அவர்கள் மூலம் | 500.00 |
| ‘முத்தாரம்’ இதழ் சார்பாக | 555.00 |
| ‘மறவன் மடல்’ நாளிதழ் சார்பாக | 101.00 |
| அமைச்சர் செ. மாதவன் | 500.00 |
| வழக்கறிஞர் பு. ரா. கோகுலகிருஷ்ணன் | 500.00 |
| முன்னாள் மேயர் வி. முனுசாமி எம்.சி. | 500.00 |
| கா. வேழவேந்தன் எம்.எல்.ஏ. | 250 00 |
| எம். சண்முகம் எம்.எல்.ஏ. | 250.00 |
| திருமதி மங்களம்மாள் (திரு. இராகவானந்தம் எம்.எல்.சி. துணைவியார்) | 250.00 |
| ஆர். டி. பாஸ்கரன் எம்.சி. | 101.00 |
| காட்டூர் இராமையா | 100.00 |
| ‘மாலைமணி’ நாளிதழ் சார்பாக—தோழர்கள் கே. ஏ. கிருஷ்ணசாமி, பி. எஸ். இளங்கோ ஆகியோர் மூலம் | 1001.00 |
| சென்னை பார்க்பேர் பொருட்காட்சி சார்பாக அமைப்பாளர் தோழர் கே. கோவிந்தசாமி அவர்கள் மூலம் | 501.00 |
| ‘நம் நாடு’ இதழ் அலுவலக ஊழியர்கள் சார்பாக | 51.00 |
| சென்னை 8-வது வட்ட மாநகராட்சி உறுப்பினர் தோழர் இரா. மு. மனோகரன் | 25.00 |
| சென்னை—இராயபுரம் அண்ணா நற்பணி மன்றம் சார்பாக செயலாளர் கே. பாலு | 5.00 |

# பேட்டைவாய்த்தலை

## ஆலைத் தொழிலாளர் வெற்றி

### 78 நாள் வேலை நிறுத்தம்--கதவடைப்பு முடிவு

சென்னை, டிச. 3—

கடந்த 78 நாட்களாக பேட்டைவாய்த்தலை காவேரி சர்க்கரை ஆலை ஊழியர்கள் மேற்கொண்டிருந்த வேலை நிறுத்தப் போராட்டம் இன்று வெற்றி பெற்றது.

சென்னையில் தொழிலாளர் நலத்துறை ஆணையர்முன் நடந்த பேச்சுவார்த்தையின் முடிவில் கழகத் தொழிற்சங்கம் இவ்வெற்றியை ஈட்டியது.

இந்தப் பேச்சுவார்த்தை முடிவுகளின்படி 5—12—68 அன்று காலை 6-மணி முதல் நிர்வாகம் தனது கதவடைப்பை நீக்கும்; தொழிலாளர்களும் வேலை நிறுத்தத்தைத் திரும்பப் பெறுவர்.

இந்தப் பேச்சுவார்த்தையில் பேட்டைவாய்த்தலை காவேரி சர்க்கரை ஆலைப் பட்டாளிகள், மற்றும் ஸ்டாப் யூனியன் சார்பில் திருச்சி மாவட்ட திராவிடத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கச் செயலாளர் தோழர் எஸ். ஜி. கிருஷ்ணன், குளித்தலை முத்துக் கிருஷ்ணன், ஆர். கருப்பையா, டி. கே. இரங்கநாதன் ஆகியோரும் காவேரி ஆலைத் தொழிலாளர் சங்கச் சார்பில் அதன் பொதுச் செயலாளர் கே. எம். சுந்தரமும், நிர்வாகத் தரப்பில் இருவரும் கலந்துகொண்டனர்.

முடிவாகப் பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டன:—

1. காவேரி சர்க்கரை ஆலையிலிருந்து நீக்கப்பட்ட பாட்டாளிகள் 21-பேரில் 20-பேர் தொடர்ந்த சர்வீசோடு மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படுவர்.
2. தொழிலாளிகள் அனைவருக்கும் இருபது சதவிகிதம் போனசு தரப்படும்.
3. தொழிலாளிகளின் பாக்கியுள்ள கோரிக்கைகளை இரு தரப்பும் கூடிப் பேசித் தீர்த்துக் கொள்வது.

இது வன்றி இப்போராட்டத் தொடர்பில் சென்னையில் ‘டேர் ஹவுஸ்’ முன்பும், பேட்டைவாய்த்தலையில் ஆலை முன்பும் மறியல் செய்து கைதாகி சென்னை மற்றும் திருச்சிச் சிறைகளிலுள்ள 61 தொழிலாளர்களும் விரைவில் விடுதலை பெறுவர்.

பேச்சுவார்த்தை முடிவிற்குப் பின், சென்னையில் தம்மைச் சந்தித்த குளித்தலை முத்துகிருஷ்ணனிடமும், எஸ். ஜி கிருஷ்ணனிடமும் அமைச்சர் செ. மாதவன் அவர்கள், இதற்கான வாக்குறுதியைத் தந்தார்.

# நெல்--அரிசிக்கு விலைக்கட்டுப்பாடு

## மத்திய அரசின் புதிய உத்தரவு

திருச்சி, டிச. 4—

“தமிழ்நாட்டில் நெல், அரிசிவிலைகள் உயராமல் கட்டுப்படுத்தவும், நெல், அரிசிப் பதுக்கலைத் தடுக்கவும் இன்றியமையாப் பண்டங்கள் சட்டத்தின்கீழ் ஓர் உத்தரவை மத்திய அரசு பிறப்பித்துள்ளது. ‘கட்டுப்பாட்டு விலைகளிலேயே அரிசி, நெல்லை விற்க வேண்டும்’’ என்று உத்தரவு கூறுகிறது.

“இந்த உத்தரவு மூன்று மாத காலம் நடைமுறையில் இருக்கும்’’ என்று மத்திய உத்தரவு கூறுகிறது.

அரசு கொள்முதல் திட்டத்தின் கீழ் அரிசி கொடுத்த பிறகும் நிலவுடைமையாளரிடம் மிகுதி இருந்தால், அதைக் கட்டுப்பாட்டு விலையில்தான் விற்க வேண்டும் என்பதே இந்த உத்தரவின் கருத்தாகும்.

## க. அறிவழகன்

### எம்.எல்.சி. சுற்றுப்பயணம்

டிச. 5: காலை 11 மணி: திருவள்ளூர்—நகராட்சி மகளிர் உயர்நிலைப் பள்ளி விழா; மாலை 3 மணி: கௌடி உயர்நிலைப் பள்ளி விழா; மாலை 6 மணி: ஆசிரியர் கூட்டம்.

டிச. 6: காலை 10 மணி: கிருட்டினகிரி— அரசு உயர்நிலைப் பள்ளி; காலை 11-30 மணி: மகளிர் பள்ளி; மாலை 4 மணி: சிகர்லப்பள்ளி மாணவர் மன்ற விழா; மாலை 5 மணி: பெற்றோர் விழா; இரவு 8 மணி: தி மு.க. பொதுக்கூட்டம்.

நவ. 7: காலை 10 மணி: கிருட்டினகிரி—ஆசிரியர் சங்கக் கூட்டம்; மாலை 3 மணி: தொடக்கப் பள்ளி ஆசிரியர் சங்கக் கூட்டம்; இரவு 7 மணி: சிறப்புக் கூட்டம்.

# ஒரே மாவட்டத்தில் 163 கொலைகள்!

ஐதராபாத், டிச. 4—

‘தமிழகத்தில் சட்டம் இல்லை--ஒழுங்கு இல்லை--அமைதி கெட்டுவிட்டது--குற்றங்கள் பெருகிவிட்டன’ என்றெல்லாம் காட்டுக் கூச்சல் போட்டுவரும் காங்கிரசுக் கட்சியினருக்கு, அவர்கள் கட்சி ஆளும் ஆந்திரத்தில் சட்டம்--ஒழுங்கு எந்த நிலையில் இருந்துவருகிறது என்பதற்கு இதோ ஒரு சான்று!

கடந்த பொதுத் தேர்தல் முடிந்ததிலிருந்து இதுவரை ஏறக்குறைய 20 மாத காலத்தில் ஆந்திரத்தில் உள்ள கர்நூல் மாவட்டத்தில் மட்டும் 163 கொலைகள் நடந்துள்ளன.

ஆந்திர சட்டமன்றத்தில் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் திரு. வி.பி. இராசு இத்தகவலை அறிவித்தார்.

துணைக் கேள்விகட்குப் பதிலளிக்கையில் அவர் கூறியதாவது:—

“இக்கொலைகள் அரசியல் நோக்கம் கொண்டவையல்ல; 27 கொலைகள் கோஷ்டித் தகராறுகளால் நிகழ்ந்தவை; 25 கொலைகள் பெண் தகராறுகளினால் ஏற்பட்டவை; 14 கொலைகள் திடீர்க் கலவரங்களால் செய்யப்பட்டவை; 20 கொலைகள் குடும்பத் தகராறு காரணமாக நடந்தவை; எஞ்சியவை கொள்ளை முதலான பிற காரணங்களால் நடந்தவை.’’

# அண்ணா சிகிச்சை நிதிக்கு சென்னையின் பங்கு

## தனிக் கூட்டத்தில் காணிக்கை வழங்கப்படும்

### கழகத் தோழர்களுக்கு மாவட்டச் செயலாளர் நீலநாராயணன் வேண்டுகோள்

சென்னை, டிச. 3—

சென்னை மாவட்ட தி. மு. க. செயலாளர் நீலநாராயணன் அறிவிப்பதாவது:—

“அறிஞர் அண்ணா சிகிச்சை நிதிக்குச் சென்னையின் பங்கைச் செலுத்துவதற்காக சென்னை மாவட்ட தி. மு. க. சார்பில் 14-12-68 அன்று மாபெரும் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெறும்.

“அக்கூட்டத்தில், கழகத் தோழர்கள் ஒவ்வொருவரும் தம்மால் முடிந்த அளவு நிதியை, கழகப் பொருளாளரும் பொதுப்பணி அமைச்சருமான திரு. மு. கருணாநிதி அவர்களிடம் தரவேண்டும். குறைந்தது, ஆளுக்கு ரூபாய் ஐந்தாகிலும் தரவேண்டும்.

“தாயகத்தைக் காத்த அண்ணாவின் நோயைத் தீர்ப்பதில் நம் பங்கும் இருக்கிறது என்று பெருமை கொள்ளத்தக்க வண்ணம் ஒவ்வொரு தோழரும் கணிசமாக நிதி தரவேண்டும்.

“சென்னையின் பகுதி, கிளைக் கழக நிர்வாகிகள் அனைவரும் இக்கூட்டத்தில் நிதி குவிவதற்கான முயற்சியை ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் மேற்கொள்ள வேண்டும்.

“சென்னை மாவட்ட தி. மு. கழகப் பங்கின் முதல் தவணையாக இக்கூட்டத்திலேயே பத்தாயிரம் ரூபாய் தரத்தக்க வண்ணம் பகுதி—கிளைக் கழகத் தோழர்களின் உற்சாகம் அமையவேண்டும்.

“அண்ணன் சிகிச்சை நிதிக்குத் தம்பியர் வாரி வழங்கும் இந்தக் கூட்டம், நடக்கும் இடமும்--பிற விவரங்களும் பின்னர் அறிவிக்கப்படும்.’’

# அறிஞர் அண்ணா சிகிச்சை நிதி

## கழகப் பொருளாளர் நிபந்தனை

சென்னை, டிச. 4—

“அறிஞர் அண்ணா சிகிச்சை நிதி திரட்டுவதன் பொருட்டு இனிமேல் தாம் கலந்துகொள்ளும் பொதுக்கூட்டங்களில் குறைந்த அளவு ஐயாயிரம் ரூபாயாவது சேர்த்து அளிக்க வேண்டும்”

என, பொதுப் பணித் துறை அமைச்சரும் கழகப் பொருளாளருமான திரு. கருணாநிதி அவர்கள் அறிவித்துள்ளார்.

இந்த அறிக்கைக்கு இணங்கத் தொகையளித்துக் கூட்டம் நடத்தத் தஞ்சை மாவட்டமும், சென்னை மாவட்டமும் ஒப்புதல் அளித்துள்ளன.

★

பொருளாளர் வேண்டுகோளையொட்டி அறிஞர் அண்ணா அவர்கள் சிகிச்சை நிதிக்காக தமிழ்நாடு சட்டமன்றத் தி. மு. க. உறுப்பினர் கா. வேழவேந்தன் பி.ஏ.பி.எல். அவர்கள், தமது ஒரு மாத ஊதியமான ரூ. 250-ஐ அளித்துள்ளார்.

# மாமியார்--மருமகள் போராட்டம்!

புதுடில்லி, டிச. 4—

மக்களவையில், மத்திய--மாநில உறவு பற்றி நடந்த விவாதத்தில் அரசியல் சம்பந்தமற்ற வேறு உறவுகளும் அடிபட்டன!

மத்திய--மாநில உறவு முறை, தாம்பத்திய உறவு போன்றது என்றும், தம்பதிகள் சச்சரவிட்டாலும் விட்டுக் கொடுக்கும் எண்ணம் இருக்க வேண்டும் என்றும், ஆனால் அண்மைச் சம்பவங்கள் நல்லுறவைக் காட்டவில்லை என்றும் பி. கே. தேவ் (சுதந்திரா) கூறினார்.

முரசொலி மாறன்:— “அது எப்படி இருக்கும்? தன்னை மாமியாராகவும், மாநிலங்களை மருமகள்களாகவும் மத்திய அரசு கருதுகிறது.’’

அமைச்சர் சவாண் உட்படப் பலர் சிரித்தனர்; ஆனால், ‘ஒரு நாள் மருமகள் மாமியாராக மாட்டாளா?’ என்று கழக உறுப்பினர் வெ. கிருஷ்ணமூர்த்தி குறுக்கிட்டுக் கேட்டார்.

## மாநிலங்களை ஆட்டிப்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிறப்பிக்கும்பொழுது அமைச்சரவையைக் கலந்தே பிறயுபித்திருக்கிறார்; அதே போல் மாநில அரசுகளையும் கலந்து பேசியிருக்க வேண்டும்; அதுதான் நல்ல மரபும் ஆகும்.

நான்காவது பொதுத் தேர்தலுக்குப் பிறகுதான் இந்தியக் கூட்டாட்சி முறை உண்மையாகச் செயல்படத் தொடங்கியிருக்கிறது.

மத்திய அரசு நாட்டின் ஒருமைப்பாட்டைக் காப்பாற்றப் போதுமான அதிகாரங்களை மட்டும் வைத்துக்கொண்டால் போதும்; மற்ற அதிகாரங்கள் மாநில அரசுகளுக்கு தரப்பட வேண்டும்.

இப்பொழுது கேரளத்துடன் நடைபெறுகிற சண்டையை நிறுத்துமாறு மத்திய அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.’’

(பேச்சின் முழு விவரம் நாளை)

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.